மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

| | |
|---|---|
| ஒப்பந்தத்தின்கீழ் வந்தவர்கள் | 43,830 |
| ஒப்பந்தத்தின்கீழ் அடங்காதவர்கள் | 14,728 |
| மொத்தம் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்து சேர்ந்த அகதிகள். | 58,558 |

*Pre-school children in Dharmapuri district*

* 360. *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to feed pre-school children with the aid of UNICEF or Central Government in the Dharmapuri district; and

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 'யூனிசெப்' நிறுவன உதவியுடன் சத்து உணவு வழங்கு திட்டம் எதுவும் தற்போது ஆலோசனையில் இல்லை எனினும், சில பாலர் பள்ளிகளில் மகளிர் பாலர்களுக்கான செய்முறை சத்து உணவுத் திட்டம், இந்திய அரசின் ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ்ச் செயல் படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், தருமபுரி மாவட்டம் பென்னாகரம், காவேரிப்பட்டணம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் உட்பட தெரிந்தெடுக்கப்பட்ட 28 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, as the entire Dharmapuri district especially Hosur and Denkanikottah taluks are backward areas, may I know whether the Hon. Minister will introduce such a scheme at least in Hosur and Denkanikottah taluks ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபோன்ற திட்டங்கள் பெண்ணாகரம், காவேரிப்பட்டினம், பிறகு கிருஷ்ணகிரி ஆகிய வட்டங்களில்தான் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டுப்படி செயமுறைத் திட்டமும், சத்துணவுத் திட்டமும் இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அத்திட்டத்தை நீட்டிக்கும் போது தரலாம். மேலும், குழந்தைகளுக்காக தனியாக சத்துணவுத் திட்டம் என்பதை ஒரு சிறப்புத் திட்டமாக மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் குடிசைவாழ் குழந்தைகளுக்கும் மலைவாழ் குழந்தைகளுக்கும் தரப்பட்டுவருகிறது. அந்தத் திட்டம் இப்போது தர்மபுரிக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

*Office building for Social Welfare Board.*

* 361 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the State Social Welfare Board has made any request to the Government for grant of money for constructing an office building; and

(*b*) if so, the details thereof?